# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௩] யாழ்ப்பாணம்:- கர வருட தை மீ ௯ உ செவ்வாய்க்கிழமை (22 ஜனவரி 1952) [இல - ௭அ]


# "சும்மா இரு" என்ற தூய உபதேசம் பெற்ற பெரியார்

## வேதாந்த சித்தாந்த சமரச ஞானி

### தாயுமானுர் அருளால் அவதரித்த அடியார்

சோழநாட்டிலே திருமறைக்காட்டிலே சைவ வேளாண் மரபிலே கேடிலியப்ப பிள்ளைக்கும் கெஜவல்லி யம்மாளுக்கும் இரண்டாம் புத்திரனுகச் சுவாமிகள் திருவவதாரஞ்செய்தனர். திரிசிரபுரமலையி லெழுந்தருளியிருக்கும் தாயுமானேஸ்வரர் திருவருளை வேண்டி அவரைப் பெற்றனராதலின் அவருக்குத் தாயுமானவர் என்னுந் திருநாமமமைந்தது. இவர் வடமொழி தென்மொழிகளிற் பாண்டித்தியம் பெற்று வேதாகமங்கள் மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகள் முதலியவற்றைக் கற்றுத் தெளிந்தார்.

தந்தையார் கேடிலியப்பபிள்ளையவர்கள் திரிசிரபுர அரசனுகிய விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின்கீழ் உயர்தர உத்தியோகம் வகித்திருந்து சிவபதமடைந்தனர். தாயுமானவருடைய சிறப்புக்களையறிந்த அரசன் தந்தையாருடைய பதவிக்கு தன்மையாகவே அமைத்தனன். மைந்தனை,

"மகன்றந்தைக் காற்று முதவி
யிவன்றந்தை
யென்னோற்றன் கொல்லெனுஞ்
சொல்."

என்றபடி இறை மனங்களிப்பத் தங் கடமைகளைத் திறம்பட வாற்றினர்.

எனினும், அவர் மனமோ, ஞானசாரியரை யடைந்து ஞானுபதேசம் பெற்றுச் சிவாநுபூதியடையும் வழி காண்பதே இருந்திய இலக்காய்க் கொண்டது. "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்றபடி தாயுமானுர் வேண்டியது ஈவாராய்த் தாயுமானேஸ்வரர் கோயிலிற் தக்ஷிணுமூர்த்தி சந்நிதானத்தில் நிஷ்டையிலமர்ந்திருந்தாரொருதிருநாளில் மௌனகுரு சுவாமிகள். வருமுறை நெறியில் அருள பெறுவாராய் வழிபாடாற்றி வந்தனர் தாயுமானவர். கண்டனர் காட்சி கண்ணகளிகூர. சென்றனர் விரைந்து திருவடி யிறைஞ்சினர். திருக்கரத்தினிற் பொருந்திய புத்தகம் யாதோவென்னப் புனித வாயாலிருந்து வேண்டினர். சிவஞானசித்தியெனத் திருவாய்மலர்ந்து, திருவருள் சுரந்து, செந்நெறி காட்டிச் சிறிது காலத்துக்கு இல்லறத்தமர்ந்து, பிள்ளைப்பேறு பெற்று வாழுமாறு பணித்தருளித் தமேவாத நிஷ்டை நெறி காட்டி அருள்புரிவதாகச்செப்பியெழுந்

தனர் சற்குருமூர்த்திகள். தாயுமானுர் மனம் தளர்வுறாதை கண்டு உபதேச மொழிப்படி பொழுதிச் "சும்மா இரு" னை

> **மெய் காண்ப தெந்நாளோ ?**
>
> வேண்டாம் விருப்பும் வெறுப்பும் — அந்த
> விவேகத்தாலே விளையுஞ் சனனம்
> ஆண்டானுரைத்தபடியே — சற்றும்
> அசையாதிருந்துகொள் ளறிவாகி நெஞ்சே.
>
> வயதம் படவெழுந்து பிணியங் கிடிதி மென்று
> வரவுஞ் செயலழிந் துளிருமலுமாகி
> அனமுஞ் செலுதவின்றி விழியஞ் சுடர்களின்று
> மூசமுங் களைகளின்று சரியெனநாடி
> மனைவியின் புறவிருந்து வினவுங் குலைகுலைந்து
> கலகஞ்செய் விருண்டயமன் வருமவேளை
> வந்துணை பழிகார மனமே!
>
> கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
> மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப தெந்நாளோ.

உள்ளங் குளிர உறுதி மொழி கூறினர்.

அவ்வழி பொழுதுக் தாயுமானுர் மனம் இல்லறத்துக்கிசைக்

இலது. எனினும் சற்குருமூர்த்தியின் திருவாக்கை யுளத்திருத்தித் தமையனுர் சிதம்பரப்பிள்ளை முதலியோர் கருத்துக்கிசைந்து, அறிவு வாய்ந்தவரும் ஒத்த மரபினருமாகிய மட்டுவார்குழலம்மையாரை மணஞ்செய்து,

"தென்புலத்தார் தெய்வம்
விருந்தொக்க றொன்றுங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்றபடி அறநெறித்தாய இல்வாழ்க்கையாற்றினர். அம்மையார் கனகசபாபதி என்னும் மகவையீன்று பரவாழ்வை யெய்துதலும் இல்வாழ்க்கையும் ஒடுங்கியது.

அடிகள அதிதீவிர பக்குவ

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சமயப்பணி ஆற்றிய சைவ மங்கையர்

### புண்ணியத்தின் புண்ணியமாய பூவையர் புனிதநெறி

உமை ஒரு பாகன் என்றபொழுதே சைவ உலகில் பெண்ணும் ஆணும சமத்துவ உரிமை பூண்டுள்ளோர் என்பது அமையும். இக்காலத்தில் பெண்கள் சம உரிமைக்குப் போராடுவதை விட்டு, சைவ சமய சேவை செய்யும் உரிமையைச் செவ்வனே செய்வார்களாக! "ஞானசம்பந்தன்" சைவ மங்கையர்களைப்பற்றிக் குறிப்பிட்டதை இங்கு காண்க.

முற்காலத்திலே சைவமங்கையர்கள் எவ்வளவு பேர் இல்லறத்தில் இருந்துகொண்டே சமயப் பணி செய்திருக்கின்றூர்கள் என்பது நமது பெரியபுராணம் நன்றாகக் காட்டுகின்றது. கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர்தொடுத்துப் புகழ்கொண்டார் என்று கேட்ட பொழுதே திலகவதியார் தம் உயிரை நீக்க எண்ணினுர் உடன் பிறப்பு தடுத்தது. அதனாற்றுயி ரைக்கும் அருள் தாங்கினுர். திருவதிகை வீரட்டானத்தில் சரியைத்தொண்டு செய்து வந்தார். அதுமட்டுமா ? தனது தம்பியைப் புறச் சமயச் சூழலினின்றும் விடுவிக்க வேண்டும் என்று நாடோறும் பெருமானிடம் வேண்டினுர். பெருமான் சூலைநோய்கொடுத்தார் அப்பருக்கு. அருள் பெறுங் காலம் கிட்டியது. அவரே தமக்கையிருக்கு மிடம் தேடி வந்தார். கண்டு வணங்கினுர். வணங்கிய தவருக்குத் திலகவதியார் திருநீறு அஞ்செழுத்தோதிக் கொடுத்தார். அப்பர் மீண்டும்

வந்து சமயஸ்தாபனம் செய்தார். அடுத்து மங்கையற்கரசியாரை எடுத்துக் கொண்டால் அவரும் அப்படியே. அவர் சோழன் மகளார் பாண்டியனின் மாதேவியார், மதுரை முழுவதும் சமண சமயச் சேன் பரப்பு, அரசனும் அதில் சிக்குண்டான். தாமும் அமைச்சரும் சைவசமயிகளாகத் திகழ்ந்தார்கள். ஞான சம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்துச் சைவஸ்தாபனம் செய்யச் செய்தார்கள். சைவம் நாடெங்கும் பரவியது. அரசரும் சைவராயினர். தந்தை தலையைப் பிடிக்கத் தான் இணங்காததால் இரண்டையும் மடியில் வைத்துக்கொண்டு, இரண்டு கைகளையும் தனது ஒரு கையால் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் தனது ஒரே இளைய பாலகனை அறுத்துக் கறி சமைத்தவர் சிறுத்தொண்டரின் மனைவியாரல்லவா? இது போன்று இன்னும் பல சைவப் பெண்மணிகளை [illegible] சைவத்தமிழ் [illegible] சைவசமயம்.

பிறவிப் பிணிக்கோர் மருந்து

தாதாய் மூவே முலகுக்குந் தாயே நாயேன் றனையாண்ட பேதாய பிறவிப் பிணிக்கோர் மருந்தே பெருந்தேன்பில்க எப்போது மேதா மணியே யென்றென்றேத்தி யிரவும் பகலும் எழிலார் பாதப் போதாய்ந் தணைவ தென்றுகொல் லோவென் பொல்லா மணியைப் [புணர்ந்தே

அரசியல் அலை

## கொழும்பு நகரசபையிற் கொழுந்தாடு பிடித்தல்

### தலைவர் பதவியால் வந்த தலையிடி!

### பரநலப் பிரியர்களா? சுயநலப் புலிகளா?

### தெரிவுக்குத் திருவுளச் சீட்டுப் போட்டாலென்ன?

**இதுவரை இலங்கையில் எந்த இடத்திலும் நிகழாத கேவல நிலைமை தலைநகரத்தில் ஏற்படவேண்டிய தலைவிதியா? நகரசபை அங்கத்தவம் நகரசேவை விருப்பின் பயனு அல்லது சுயநலப் பேராசையின் விளைவா என்பதை யார் விளக்க வல்லவர்கள் என்பதுதான் இப்போதைய பிணக்கு.**

தலைவர் பதவிக்கு ஒப்பந்தம் உடம்படிக்கை செய்கிறூர்களாம். யார்? பொதுசன வாக்குரிமை பெற்றுச் சனநாயக முறைப்படி தெரிந்தெடுக்கப் பெற்ற அங்கத்தவர்கள தலைவர் பதவியைத் தனிச் சொத்தாய்ப் பாவித்துப் பங்குபோட எத்தனிப்பதும் அதைப் பற்றி ஆபாசமான வாக்குவாதங்கள் நிகழ்த்துவதும், அந்தரங்க இரகசியங்களின் அருவருக்கத்தக்க அங்கத்தவத்துக்காகாத கோரக்கங்களைப் பார்க்கும்பொழுது, இலங்கையின் எதிர்கால நிலைமையை எவ்வாறு முடிக்கப் போகிறூனவென்று ஏங்க வேண்டியதாயிருக்கின்றது!

இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர்கள் தங்கள் தங்கள் சார்பான அங்கத்தவர்களின் துணையைக்கொண்டு ஒரு உடம்படிக்கை செய்து மூன்று வருடங்களுக்கும் தலைமைப் பதவியைத் தங்களுக்குள் கிரயித்துக்கொள்ள முயலுவதை சனநாயக முறை என்றுசொல்வதானுல், டிராட்சிக்காரரின் நீதி கொள்கை சாலச் சிறந்ததாகக் கணிக்கப்படலாமே!

#### திருவுளத் தெரிவு

உள்நாட்டு நிர்வாக முறையில கட்சிப்பற் றிலாமலிருப்பது நன்றெனப் பொது அபிப்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

திருத்தொண்டர் திருநாள்

## ஆணையை ஆருயிராய் அபிமானித்த அடியார்

### அரன் நாமங் கேட்டு ஆசாதது நீத்த அறிஞர்

ஆதியர் நீலகண்டத் தளவுதான் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்த்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி "எம்மைஎன் றதனுல் மற்றை
மாதரார் தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன்" என்றூர்.

மன்றுளே திருக்கூத் தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டித் தேவர்கள் தேவர் தாமும்
'வென்றஐம் புலனுல் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்பால்
என்றுமிவ் இளமை நீங்கா'' தென்றெழுந் தருளினுரே.

ஆணையிடுவது சர்வசாதாரணமாய்ப், பொய்மைக்குப் புகலிடமாய், இருக்கின்ற இக்காலத்தில், காலையில் ஒன்று, கடும்பகலிற் பிறிதொன்று, மாலையில் வேறொன்றாய், வாய்மையினின்றும் வழுதவறும இக்காலவில், ஆணைமேல் வைத்த அபிமானத்தில், அதிலும் திருநீலகண்டம் என்ற திவ்விய நாமத்தின்மேற் கொண்ட தீரா அன்பினுல், அடியார் தாம் இளமை மீளா இன்பத் துறையிலிருந் எளியர்' ஆனதை நினைந்து வருந்தி 'மாதரார் மனத்தினுந் தீண்டேன்' என்ற மாபெரும் விரதம்பூண்ட திருநீலகண்டநாயனுர் திருக்கதையைத் திரும்பவுந் திரும்பவும் படித்தறிவது சாலப் பொருத்தமுடைத்தெனக.

[இன்று திருநீலகண்ட அடிகள் திருநாள்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். கரவருடம் தைமீ கூஉ செவ்வாய்க்கிழமை

## கொழும்புமா நகரா? குபேர புரமா?

பல்லாண்டுகளாகத் தங்கள் சாதியினரின் ஆதிக்கத்தில் அடிமை நாடாக இருந்து சமீபத்தில் சுதந்திரம் பெற்ற தேசத்தைத் தரிசிக்க விருப்பங்கொண்டு வர இருக்கும் அரச குடும்பத்தினரை வரவேற்க, கொழும்புமா நகரம் குபேரபுரமாக மாறுகின்றதை நாம் காண்கின்றோம். இவ் விநோத மாற்றத்தை அமைப்பவர்கள் இலங்கையரசாங்கத்தினரே.

குபேர சம்பத்துள்ள நாட்டிலே குபேரபுரம் அமைக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே இவ்விலங்காதீபம் இந்திர போகமும் குபேர வளமும் நிறைந்த தெய்வ லோகம் என்று எண்ண வேண்டியதாக இருக்கும். ஆனல் நிலைமை உண்மையில் அவ்வாறு இருக்குமா என்று ஆர்தான் நினைக்கமுடியும்.

மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் வானளவ எழும்புதலும், விண்மீன்களெல்லாம் சிலகாலம் மண்ணுலகிற் சஞ்சாரஞ் செய்வதுபோன்று மின்சார தீபங்கள் விளங்குதலும் இவையெல்லாம் கண்ணுக்கு விருந்தாயிருக்கலாம். ஆனல் இத் தீபகத்தில் இப்போதைய பொருளாதார சன சமூக வாழ்க்கை நிலையை உள்ளபடி உணர்ந்தவர்கள் கருத்துக்கு விருந்தாகா! நாட்டிற் குளங்கள் தோண்டி அல்லது நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச் செய்யப் பணந் தேவை என்று ஒரு கிராமச் சங்கம் அல்லது வேறு உள்ளூர் நிருவாக சங்கங்கள் கேட்டால், அவற்றிற்கெல்லாம் ஆயிரக் கணக்கான குறுக்கு விசாரணைக் கேள்விகள் கேட்டுப் பல ஆண்டுகள் கழியவிட்டுப் பழங் கதையாக்கிவிடுவார்கள்.

வைத்திய நிலையங்கள், ஏழைகளுக் குதவி புரியுந் தரும நிலையங்கள் இன்னும் வேறு வாழ்க்கைக் கின்றியமையாத வசதிகள் ஏதும் நிறுவவேண்டுமேயானுல் அரசாங்க வாகட முறைப்படி நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து, எல்லா வசதியீனங்களையும் கேட்போர்களுக்குப் புரிந்து ஈற்றில் அவர்களைக் களைப்புறச் செய்துவிடும்! இந்தக் கொழும்புத் திட்டக் காட்சிமட்டுமே அரசாங்க நிருவாக வாகட முறைக்கப்பாற்பட்டதாய், எந்த முறையிலும் எவ்விதத்திலும் எச் செயலிலும் இயற்றப்படத்தக்கதாய் அமைப்பதற்கு அரசாங்கத்துக்கு வற்ருப் பொன் குழிகள் இருக்கின்றனவா?

நாட்டில் வறுமையும் பிணியும் குடிகொண்டு குடியானவர்கள் உண்ண உடுக்கப் புற நாடுகளை நோக்குவதுமல்லாமல், பதின்மடங்கு விலை கொடுத்து வாங்கவேண்டிய பரிதாப நிலையிலிருக்கும் பொழுது அரச குடும்பத்தினரை அளவாக ஆனல் நல்ல ஆதரவாக வரவேற்று உள்ளன்பைக் காட்டிவிட்டாற் போதாதா? அகில உலகமும் பசிப் பிணியால் வாடுகின்றது. பஞ்சம் வந்துகொண்டிருக்கிறது யாவரும் அவதானமாக இருக்க வேண்டும். ஒரு செம்புக் காசுதானும் வீணுய்ச் செலவு செய்யக் கூடாதென்று அரசியல் வட்டாரங்களில் மாத்திர மன்று, பொதுசனத் தலைவர்களும் எச்சரிக்கை செய்யும் அமையத்தில் இவ்விதமான விநோத வேடிக்கைகள் பொருந்தாக் காட்சிகளாக இருக்கின்றன என்பதை நாம் சொல்லவும் வேண்டுங்கொல். ஒருவேளை "நெல்லுக்கிறைத்தநீர்வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்றவாறு இந்தக் கொழும்புக் காட்சிச் செலவு சிறிது ஊரவர்களுக்கும் சொரியும் என்று மனத்தை ஆறுதல் செய்வேமாக.

卐

## ஒற்றுமைக்கு இது ஒரு வழி!

பாராளுமன்றமேற்சபையிற் கொணரப் பெற்றுப் பின் ஒரு ஆராய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பெற்ற இந்து ஆலயங்களினதும் தரும நிலையங்களினதும் பரிபாலனத்தைப் பற்றிய சட்ட திட்டம் இலங்கை வாழ் இந்துக்களிடையே பரபரப்பையும் கட்சிபேதத்தையும் உண்டு பண்ணி விட்டதே என்று சிலர் கொண்ட கவலை நீங்கிக் களிப்பெய்துங் காலம் வந்துவிட்டது என்று நாம் நினைக்கிறோம்.

சைவசமயத்தில் மெய்யபிமானம் பூண்டவர்கள் அநேகரிருக்கின்றார்கள் என்பதையும் சமய உணர்ச்சி தளராது வளர்ந்துகொண்டேவருகின்றதென்பதையும் இன்றைய உலக நிலையில் இலங்கையில் நாம் காணக்கூடியதாயிருப்பது மகிழ்ச்சியையும் மன ஆறுதலையுங் கொடுக்கின்றது. குறிப்பிடப்பெற்ற இச் சட்டதிட்டத்துக்குச் சாதகமாயிருப்பவர்களும் பாதகமாயிருப்பவர்களும் மேலான சமயாபிமானப் பேருணர்ச்சியால் ஆத்தம் நிலையில் நிற்கின்றார்கள் என்பது எவரும் மறுக்கொணுத ஓர் உண்மை.

இதுவரை இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளைக் கவனிக்கும்பொழுதும் ஏனைய பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் தோற்றியனவற்றை அவதானிக்கும்பொழுதும் பொதுவாக இது போன்ற ஓர் சட்டம் அத்தியாவசியகம் என்பது யாவரும் ஒப்புக்கொண்ட தொன்ருகப் புலப்படுகின்றது. ஆகவே இச்சட்ட திட்டத்திற் றிருத்தங்கள் செய்ய வேண்டிய தவசியம் என்று வாதாடுகின்றவர்கள் இப்பொழுது பாராளுமன்ற மேற் சபையாரால் அளிக்கப்பட்ட கால வசதியைக் கைவிடாது தங்கள் அபிப்பிராயங்களைப்பெரிய விரிவுரைகளாக்காமல், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் முறையில் குறிப்பிட்ட பகுதிகளுக்குக் குறிப்பிட்ட திருத்தம் இது என்றும், திருத்தத்தின் சார்பாக எடுத்துரைக்கப்படும் காரணம் இது என்பதையும் வரைந்து பரிசீலனைக் குழுவினருக்கு அனுப்பி வைப்பது பல வேறு பகிரங்கக்கூட்டங்கள் கூடி கட்சிகட்டி ஒருவரை ஒருவர் வசைகூறுவதிலும் பார்க்க மிகவும் விரும்பப்பட வேண்டிய தொன்றுமல்லாமல் அன்றின் [illegible] கருதப்படும்.

# திங்கட்செல்வன் பேறுபெற்ற திருத்தலம்

## அமர்நீதி அடிகள் அவதாரஞ் செய்த இடம்

தலையெலாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னுண்மைநந் தாற்பறைக் கொண்ணுமே
அலையி னர்பொழி லாறை வடதளி
நிலையி னுனடி யேநினைந் துய்ம்மினே.

சோழநாட்டில் காவிரியின் தென்பால் தலங்களுள் இருபத்திரண்டாவது திருத்தலமாக வைத்து எண்ணப்பெறுவது. தேர்கள் நிறைந்த அழகிய மணிமாடங்களோடு கூடிய திருவீதிகளை யுடையது. திருமலைராயன் நதிக் கரையின் தென்பால் விளங்குவது. சந்திரன் பூசித்துப் பேறுபெற்றது. அமர்நீதிநாயனுர் திருஅவதாரம் செய்த சிறப்பினது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளது திருப்பட்டீச்சரத் திருப்பதிகத்து, பழையாறை எனப் போற்றப்பெறுவது. திருநாவுக்கரசு சுவாமிகளது திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் பெற்றது.

### பழையாறை

ஆலயம் கிழக்கு நோக்கிய திருவாயிலையுடையதாய் மொட்டைக் கோபுரத்தோடு திகழ்கின்றது திருக்கோயிலுள் இறைவன் சோமநாதர் கிழக்கு நோக்கியும், இறைவி சோமகலாநாயகி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். உள் சுவர்றின்கண் அழகிய சிற்பங்கள் பல திகழ்கின்றன. அம்பிகை வெருண்டிட கயிலைமலையை எடுத்த இராவணன் வரலாற்றுச் சிற்பம் மிகமிக அழகுடன் விளங்குகின்றது. திருமழபாடியில் திருப்பணி செய்த செம்பியன் மாதேவியார் தனது வாசஸ்தானங்களில் ஒன்ருக உகந்துகொண்டது. சோழர்கள் சிலரும் தமக்கு உகந்த இடமாகக் கொண்டிருந்தார்கள்.

ஆலயத்தின் திருமுன்பு தீர்த்தம் உள்ளது. சந்திரன் மூழ்கி நீராடிப் போற்றியமையால் அது சோம தீர்த்தம் எனப் பெயர்பெறுவது.

### வடதளி

இந்த ஆலயம் பழையாறைக்கு வடபால் திருப்பட்டீச்சரத்துக்குக் கீழ்பால் ஒரு மைல் தொலைவில் உள்ளது. மாடக் கோயில். மேற்கு நோக்கிய சந்நிதி. வெளிவாயில் தென்புறம் திகழ்கின்றது. முன்புறம் அமர்நீதி நாயனுர் திருவடிவம் அவரது மனைவியாரோடு திகழ்கின்றது. பிராகாரங்களில் சிதைவுற்ற இலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. இறைவன் ஸ்ரீ வடதளிநாதர். பதினறு கோணமாயுள்ள மிகப் பெரிய இலிங்க வடிவினர். இறைவி ஸ்ரீ சௌரியம்மையார். இவ்வாலயத்தை வளலார் ஆலயம் எனவும் வழங்குவர். அமணர்களால் மறைபட்டுப் பின் திருநாவுக்கரசு நாயனுர் உண்ணுவிரதம் பூண்டு தோற்றுவித்த ஆலயம்.

### வரலாறு

திருநாவுக்கரசு சுவாமிகள் திருஆவடுதுறை அண்ணலை வணங்கிப் பழையாறையினை வழிபட வருங்கால் தன்முன் தோன்றிய வடதளி இறைவனது விமானத்தை வணங்கினர். வணங்கிய அவ் விமானம் அமணர்களால் ஆக்கப்பெற்ற பொய்மையதாய விமானம் என உணர்ந்தனர்; கேட்டு உளம்மிக வருந்தினர்; அருகிலுள்ள ஓர் இடம் சார்ந்தனர்; ஆறைவடதளி இறைவன் அருட்கழல் உன்னினர். 'அடியேனை ஆண்டருளிய இறைவா! அமணர் உமை மறைத்தனர். தேவரீர் வெளிப்பட்டு அருள் புரிதல் வேண்டும். அடியேன் உமது அருட் திருமேனியின் எழில்வண்ணம் கண்டு அன்றி அகலேன். உணவும் கொள்ளேன் என்ற திண்ணிய நினைவினராய் உண்ணுவிரதம் பூண்டனர். உலகெலாம் உய்ந்திட ஒளிர்முறை அருளிடும் உத்தமர் திருநாவுக்கரசரே உணவு கொள்ளா திருப்பின் அருளே உருவாய ஆறைவடதளி யிறைவர் பொறுத்திருப்பரோ?

அன்றிரவு அவ்வூர் நாடாளும் அரசன்பால் கனவிலே தோன்றி, தம்மை அரசன் அறியும்படி அடையாளம் அருளி, 'நம்மைமறைத்த அமணர்களை அழித்துப் போக்கித் திருநாவுக்கரசருடன் வந்து வழிபடுவாயாக' என அருளினர்.

உணர்த்த உணர்ந்த அரசன் கச்சமெய்திப் பெருமான் அருளை எண்ணிய மனத்தனுய் அமைச்சர்களை விளித்து, அடியவர் உணவு கொள்ளா திருப்பதற்குக் காரணராகிய தலைாமல் இறைவடிவினையும் மறைத்த அவ் அமணர்களையெல்லாம் ஆனையினல் கொண்டு

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## வாழ்க்கை வானில்

வானம்பாடி

### இரட்டைத் தேசியம்!

இலங்கையின் தேசிய கீதம் யாது? என்று திரு. பீட்டர் கெனமன் பாராளுமன்றக்கூட்டத்தில் அடுத்தவாரம் கேட்கவிருக்கின்றாராம்! மற்றைய புரட்சிக்காரர்கள் போலல்லாது திரு கெனமனின் சாரீரம் சற்றுச் சுகமானது. கீதம் பாடவாய்த்தது என்று சிலர் கூறுகிறார்கள். சக்கடமான புரட்சி மேடையை விட்டு சங்கீதப் பயிற்சி விட பேர்சிக்கின்றாரா என்று கேட்கின்றார் திருவாளர் பொதுசனம். அப்படி ஒன்றும் இல்லை. இலங்காதேவி சுதந்திரமடைந்தாளே. அவளுக்கு தேசிய கீதம், அமைத்துவிட்டாரோ? அவ்வாருனல் அது யாரால், என்ன மொழியில் என்றெல்லாம் ஆராய்வதுதான் இக்கேள்வியின் நோக்கம்.

இரட்டை மொழியில் ஒரு தேசிய கீதம் இயற்றக்கூடாதா எனகிருர்நண்பர் பொதுசனம். தாராளமாக முடியும் என்று நினைக்கிறோம். இரட்டையர்கள் மேலடி இரண்டும் ஒருவரும், ஈற்றடி இரண்டும் மற்றையவருமாகப் பாடிப் பொருள்நயம் சொல்நயம் மிளிரச் செய்யுள் யாத்தனரல்லவா? கயிலை பாதி காளத்தி பாதி என்ற பாக்கள் போல பாதி தமிழிலும், பாதி சிங்களத்திலும் தேசிய கீதத்தை அமைத்து இயற்றுவது முடியாதா? சாலவும் கூடுமென்று ஆமாச்சொல்கிருர் நண்பர் பொதுசனம்.

### நகரசபையிற் சுதேச மொழி!

யாழ்ப்பாணம் நகரசபை நிகழ்ச்சிகள் யாவும் தமிழ் மொழியில் இருக்க வேண்டுமென்று ஒரு அங்கத்தவர் கொணர்ந்தத இன்னெரு அங்கத்தவர் சுதேச மொழியில் (Vernacular) என்று திருத்தி ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார். திருத்தம் சர்வசம்மதமாய் நிறைவேறியதாம்.

ஆனல் 'தமிழுக்கும்' 'சுதேச மொழிக்கும்' என்ன வித்தியாசம். 'தமிழ்' என்று சொன்னல் வேறு மொழியினர் விரும்பமாட்டார்கள் என்று 'சுதேச மொழி' என்ற மறைநாமம் கொடுத்து இரகசியத்தைப் பலாரியச் செய்யாது விட ஒரு தந்திரமா?

எனினும் சர்வசம்மதமாகத் தீர்மானம் நிறைவேறியமை இந்த மொழி வர்ணனையின் மையை மறைத்தே விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்கக் கூட்டம்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிச் சைவ மாணவ சங்கப் பகிரங்கக் கூட்டமொன்று 15-1-52-ல் திரு. ச. சுப்பிரமணியம் B. A. அவர்கள் தலைமையில் சந்தை விநாயகர் கோயில் முன்றிலில் நடந்தது. வித்துவான் க. கி. நடராஜன் B. O. L அவர்கள், முதலியார் S. சின்னத்தம்பி, வழக்கறிஞர் V நாகலிங்கம் ஆசிரியர், இ. கார்த்திகேசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## அராலி சரஸ்வதி வித்தியாசாலை

### பழைய மாணவ சங்கம்

31-12-51 திங்கட்கிழமை பிற்பகல் ஆறுமணியளவில் ஆசிரியர் திரு. க. சின்னத்துரை அவர்கள் தலைமையில் இச்சங்கக்கூட்டம் ஆரம்பமாயது.

வித்தியாசாலை ஆரம்பகாலத்தில் (1912) நிலம் உதவியோர் உள்ளூர், கொழும்பு, மலாயா, பர்மா முதலாய இடங்களிற் பொருள் சேகரித்து உதவினோர்க்கு நன்றி பாராட்டப்பெற்றது.

பின்னர் சங்கம் அமைய வேண்டுவதன் நன்மைகள், வித்தியாசாலைக்குரிய தேவைகள், வருங்காலக் கல்வி நிலை, என்பனபற்றி முறையே மனேஜர் திரு. வே. சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் திரு. மு. சதாசிவம், கிராமதிபர் திரு. இ. நாகலிங்கம், பண்டிதர் திரு. ஆ. சதாசிவம், ஆசிரியர் திரு. வி. நாகலிங்கம் என்போர் விளங்கப் பேசினர்.

அதன்பின் தற்கால பரிபாலன சபையாருடன் ஒத்துழைத்து, வித்தியாசாலைக்கு நிலஞ்சேர்த்தல் தொழிற்கல்வி வசதிகளை ஆக்கல், நிதி சேர்த்தல் என்னும் தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகாரமாயின. அப்பால உத்தியோகத்தர் சபை அமைக்கப் பெற்றது.

சங்கம் அமைய உதவியாயிருந்த அனைவர்க்கும் ஆசிரியர் திரு. மு. சதாசிவம் அவர்களால் நன்றி கூறப்பெற்றதும் தேவார பாராயணத்துடன் சபை இனிது நிறைவெய்தியது.

## சத்திர வைத்திய பரீட்சை

அரசாங்க வைத்தியக் கல்லூரி அங்கத்துவ பரீட்சை (F. R. C. S Exam) யிற் சித்தி யெய்திய 6 இலங்கையருள் டாக்டர் K. ஆறுமுகம் ஒருவராயினர்.

## திங்கட்செல்வன் பேறு பெற்ற திருத்தலம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

தலைத்து அழித்திடுக என ஆணையிட்டு அழிவுபெறச் செய்தனன். ஆறைவடதளி இறைவர்க்கு நல்லதொரு விமானம் ஆக்குவித்துச் சிறப்பொடு பூசனைபெறச் செய்து, அருச்சனை வழிபாட்டு நிபந்தனைகளும் அமைத்து, திருநாவுக்கரசு சுவாமிகளை அடிபணிந்து ஆசிபெற்று அவரொடும் வந்து வணங்கினன். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளை எண்ணிய உளத்தராய், என்றும் நிலையினராய் மன்னியிருந்து அருள் புரியும் எம் இறைவடிவினை, அமணர்களால் மறைத்தல் இயலுமோ என்ற கருத்தினராய் இத்திருப்பதிகம் அருளுகின்றார்.

சருமபுர வெளி, 262

---

திருக்குறளிற் கண்ட

# அரசியல் அமைப்பு

## அரசாங்கமும் குடியானவரும் ஒழுகவேண்டிய முறை

திருக்குறள் சற்றேறத் தாழ இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பிறந்த நூலாயினும், தற்காலத்திலும் கைக்கொண்டொழுகத்தக்க நீதிநெறிகளைக் காட்டும் சிறப்பு வாய்ந்து விளங்குகிறது. ஆதலால் அதனுள் பொருட்பாலிற் கண்ட விஷயங்களைச் சற்றுவிரிவாக ஆராய்வோம்.

பொருட் பாலில் திருவள்ளுவர் கூறும் அரசியல் எத்தகைத்து? அங்கங்களின் முறை என்ன? ஆட்சிமுறையெவ்வாறு நடைபெறும்? என்பன முதலியனவே இங்கு ஆராயத்தகும்?

நவீனத்தில் உயர்வாகப் பாராட்டப்படும் ஜனநாயகம் இந்நூலிற் காணப்படாவிடினும் தனதுயிர் போல மன்னுயிர் புரத்தலும் அரசநீதி உலகநீதிகளுக்குக் குடிகளைப்போலத் தானும் கட்டுப்பட்டு அடங்கி யொழுகுதலும், நீதிநெறிகளில் தவறுமையும் தன்னுடைய விருப்பு வெறுப்புக்கட்கு இடங்கொடாமல் நாட்டின நன்மை கருதி, அமைச்சர் தன் செவிகைப்பச் சொல்லும் சொற்களைக் கேட்டு நடக்கும் பண்பும் நாட்டில் செல்வத்தை உண்டுபண்ணவும் அதைத் தொகுக்கவும் தொகுத்தவற்றை உரிய நெறியில வழங்கவும் தக்க வன்மையும், அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் முதலிய பொருந்தியிருத்தலும், இன்னு மிவை போன்ற பிறஇலக்கணங்களின் அமைதியும் அரசின் தன்மையாகக் காட்டி,

செங்கோன்மையான அரசியல் செவ்விதாய் நடந்து நாடு முன்னேற்றமடைதற்குப்படை குடி கூழ் அமைச்சுநட்பு அரண் என்ற அங்கங்கள ஒழுங்காய் அமைந்திருக்கவேண்டும்.

### அமைச்சர் அமைப்பு

அரசனிடத்தில் அன்பும் போராற்றலுங்கொண்ட படை, கலவியறிவொழுக்கங்களில் மேம்பட்டு ஊக்கமும் உழைப்பும் உள்ள குடிகள், வேண்டிய செல்வம் அறிவிற் சிறந்து காலதேச வர்த்தமானங்களையறிந்து நன்மை தீமைகளைப் பகுத்தெடுத்துரைத்து நாட்டின் நன்மையையும் அரசன் புகழையும் பெருக்கும் செயல்களைத் தேர்ந்து செய்விக்கும் அமைச்சர்கள் பொருத்தமான நட்பு, மாற்றார் படையெடுத்து வரினும் நாடுநகரங்களைப் பாதுகாக்கத் தக்க வலிமையுடைய பொறிகளமைந்த கோட்டை கொத்தளங்கள் என்னும் செயற்கையரண் காடு மலை யாறு முதலான இயற்கையரண் ஆகிய இவற்றையும் அரசியலை நடத்துவார்க்கு வேண்டிய திறமை சொல் வன்மை அவைஅஞ்சாமை, வினைத்தூய்மை மன்னரைச் சேர்ந்தொழுகல் முதலியவற்றையும் வள்ளுவர் பல அதிகாரங்களில் விவரிக்கிறார்.

குன்றாத விளைவினைச் செய்யும் உழவரும் பல துறையினும் பொருளீட்டும் பிற தொழிலாளரும் அறவோரும தாழ்விலாச் செல்வரும் வாழ்வதாய் அயல்நாடுகள் தாங்கிய பாரமெல்லாம ஓரோர் காலத்தில தன்மேல் வரினும் அவற்றையுந் தாங்குவதுடன் தன் அரசனுக்கும குடிகளுக்கும் வேண்டியவற்றை நலகும வருவாயுடையதாய் 'உறு பசியும்

### ஒழுக்கநெறி

'முறைசெய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்'

என்று கூறுவதை நோக்குங்கால், குடியாசின் உரிமைகளைத் தனியரசின் கடமைகளாக வள்ளுவர் வகுத்துரைக்கின்றார் என்பது அறியத்தகும்.

அரசனும் குடிகளும் கடப்பாடுகளை முறை பிறழாது நடத்தற்கும் நாடு எவ்விதத்துப

(மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு 'செந்தமிழ்'இல் இருந்து தொகுக்கப்பட்டது.

மேம்பாடடைவதற்கும் கல்வி கேள்விகள் மிக்குப்பரவி, அவற்றால் அறிவு முதிர்ந்து, சிற்றினம் சேராது, பெரியாரைத் துணைக்கொண்டு; குற்றங் கடிந்து செயல்வகை யாராய்ந்து, வலியறிந்து தெரிந்து, தெளிந்து செயல்புரிந்து, அறிற் சோர்வடையாது ஊக்கங் கொண்டு ஒழுகுதல் இன்றியமையாதது.

இத்தகைய அரசியலொழுக்கங்களை விதிமுகத்தானும், எதிர்மறைமுகத்தானும் விரித்துக்கூறி, அவற்றிற் பிழையாத அரச முறைமையினையே செங்கோன்மையென்று அதன்பெருமையினையும ஆவசியகத்தையும்,

'அந்தணர் நூற்கும்
அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.'
'வானோக்கி வாழும்
உலகெல்லாம மன்னவன்
கோனோக்கி வாழும் குடி,'

என்று வலியுறுத்திக் கூறினார்,

---

நேயர்கள்

## நெஞ்சம்

அசிரியர் அவர்களுக்கு,

### மதநிந்தனைபுரியும் நாடகங்கள்

நீர்கொழும்பில் கிறீஸ்தவர்கள் தங்கள் தேவாலயத்துக்கருகாமையில் நாடகமொன்று நடத்துகிறார்கள் அதில் சைவசமயிகளின் மனம் புண்படக்கூடிய ஆபாசமான சிவத்துரோக அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிள்ளையார் சுப்பிரமணியர் முதலிய உருவங்களைக் காலாலே தட்டுவதும் அவற்றை நெருப்பில் இடுவதும ஆகிய சம்பவங்கள நடைபெறுகின்றன இந்த நாடகத்தில்

இவ்விஷயத்தை உள்நாட்டு மந்திரியார் கவனிப்பாரா அல்லது சைவ பரிபாலன சபை விசாரித்து ஆவன செய்யுமா என்று தாழ்மையாய்க் கேட்கிறேன்.

ச. பொ. சிவசுந்தரம்
7/146 கடற்கரைத் தெரு
நீர்கொழும்பு

---

ஒவாப்பிணியும் செறுபகையும் சேராத தாய்ச்சாதி பற்றியோ கொள்கை பற்றியோ தம்முள் மாறுபட்டுக் கூடும் கூட்டங்களும் உடனிருந் தழிக்கும உட்பகையும் கலகஞ் செய்யுநர்களும் இல்லாததாயுள்ளது நாடென்கிறார்.

ஒரு நாடு செங்கோற்செல்வனுன அரசனும், அறிவும் சூழ்ச்சியும மிக்க அமைச்சர்களும், ஆற்றல் மிக்க படையும், குறையாத செல்வமும், ஏனையவும் வாய்ந்துள்ளதேனும் அந்நாட்டு மக்களிடம் ஒழுக்க வழக்கங்களிற் குறைபாடுகளிருப்பின அது சிறவாது; ஆகையால் அவர்கள் அநுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கமுறைகளும் விலக்கவேண்டியனவும் ஒழிபியலில் விரிக்கப்பட்டுள்ளன.

---



## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுணபொருளவிளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25 ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ 1—20 ச.

உலகம்பலவிதக் கதை 1. (கோபால நேசரத்தினம்) மேற்படி பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25 ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1.00

சைவ சமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முதலில் வெளிவாரதது. விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna



---

## பிரமாவுடைய நாள்

பிரமாவுக்குப் பகல் நாழிகை முப்பது இரவு நாழிகை முப்பது ஆக அறுபது நாழிகை கொண்டது ஒருநாள். பிரமாவினுடைய ஒரு நாளுக்குக் கணக்கு வருமாறு:—

மனிதருடைய முந்நூற்றறுபது வருடங்கொண்டது தேவர்களுக்கு ஒரு வருடமாகும். இது திவ்ய வருடமெனப் பெயர்பெறும். இந்தத் திவ்ய வருடம் பன்னீராயிரங்கொண்டது ஒரு தேவயுகமாகும். அந்தத் தேவயுகம் இரண்டாயிரங் கொண்டது பிரமாவுக்கு ஒருநாளென் றறிந்துகொள்க. அஃதாவது மனிதர்களுடைய இரண்டாயிரஞ் சதுர்யுகங் கொண்ட தேவர்களுடைய இரண்டாயிர யுகம் பிரமாவுக்கு ஒரு நாளென்றவாறும்.

— "சைவபூஷணம்"

## பகிரங்க சுகாதார பாடசாலை

தென்கிழக்கு ஆசிய நாடுகளெல்லாவற்றுக்கும் உபயோகப்படும் பொருட்டு ஓர் பகிரங்க சுகாதார பாடசாலை இலங்கையில் அமைத்தற்கு உலக சுகாதார நிலயத்தார் ஆலோசிக்கின்றனர்.

## சுதேச பாஷையில் நகரசபைக் கருமம்

யாழ்ப்பாண நகரசபைக் கருமங்கள் சுதேசபாஷையில் நடத்துதற்குக் காலந் தாழ்த்தாது தீவிர முறைகள் கையாளப்பட வேண்டுமென்றும முதற்படியாகச் சபைக் கூட்டங்கள் தமிழிலேயே நடத்த வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் யாழ்ப்பாணநகரசபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

## இந்துவாலிபர் கழகம்

மேற்படி கழகக் கூட்டம் திரு. ச. ஜயவீரசிங்கம் அவர்கள் தலைமையில சென்ற திங்கட்கிழமை (21.1-52) இந்துக் கல்லூரி மண்டபத்திற் கூடியது. முதலாவதாக வருகிற வருடத்திற்குப் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ச. தனஞ்செயராஜசிங்கம், உபதலைவர் முருகையா, காரியதரிசி பொ. கமலேந்திரன், உபகாரியதரிசி தனாதிகாரி இ. சரசானந்தன்.

பன்னிரண்டு அங்கத்தவர்களைக்கொண்ட செயற்குழு ஒன்றும் நிர்ணயிக்கப்பட்டது. நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

## ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்

ஸ்ரீ மேரு, பத்ர பூசை, லக்ஷார்ச்சனை நிகழும் கர வருஷம் தை மீ 13 உ சனிக்கிழமை 26-1-52 காலை 7 மணிக்கு ஆரம்பமாகி 28 உ ஞாயிற்றுக்கிழமை (10-2-52) இரவு 10 மணிவரையில் முடிவெய்துமென பிரம்மஸ்ரீ ஜி. பாலசுப்ரமணியக்குருக்கள் தெரிவிக்கின்றார்.

## முத்திரை

ஆகாய விமானத் தபாலுக்கு அழகிய முத்திரை வேண்டுமென்று பலர் விரும்பியபடியால் இதற்கென்று சுவிற்சர்லந்திலிருந்து சிறப்புற அமைத்த 35 சத முத்திரைகள் அரசினரால் வருவிக்கப் பெற்றிருக்கின்றன.

இவை 1-2-52-ல் உபயோகத்துக்கு வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்கள்

தரும நம்பிக்கைச் சொத்துக்கள் பற்றிய மசோதா

செனேற்சபையின் பொறுக்குசபை

இரண்டாம் விளம்பரம்

மேலே காட்டிய மசோதாவைப்பற்றி, பொறுக்குசபைக்கு அபிப்பிராயம் கூற விரும்பும் எவரும் அத்தகைய அபிப்பிராயங்களைப் பொறுக்கு சபைக்கு 21-2-52 ம் திகதிக்கு முன் தெரிவித்துக்கொள்ளலாம்.

ஈ. வி. ஆர். சமரவிக்கிரம
செனேற்சபைக் கருமாதிகாரி.

செனேற்சபை கொழும்பு,
1952ம் ஆண்டு ஜனவரி
மாதம், 19 ம் திகதி.

M. 187 22—1—52.


## சீனதேச நிலைமை என்ன?

### திரு. J C குமரப்பாவின் கருத்து

சர்வதேச சமரசமனப்பான்மையுடைய முதலாளி வர்க்கத்தினர், தேசியமுதலாளி வர்க்கத்தினர் கல்வியறிவால் வைத்திய, சட்ட விவாத ஆசிரிய பதவிகளிலுள்ளவர்கள், தொழிலாளர் சமக்காரர் என்ற வகுப்புக்களாகச் சீனதேசத்தவர்களைப் பிரிக்கலாமென்றும் முன்னைய இரு வகுப்பினர் நூற்றுக்கு 15 விகிதம் தான் என்றும் ஆகையால் பின்னைய வர்க்கத்தினர் சனநாயக வதேச்சாதிகாரத்தை உண்டு பண்ணி அரசாங்கம் நடத்துகிறார்கள் என்றும் ஆகையால் 'சீனம் பொதுவுடைமை நாடு' என்று வர்ணித்தல் உண்மையாகாதென்றும், காந்தியக் கொள்கையிலபிமான முன்னை இந்தியப்பிரமுகர் திரு. J. C. குமரப்பா கூறுகின்றார்.

## தென் ஆபிரிக்க ஒத்துழையாமை ஒழிந்தது

இந்திய தென் ஆபிரிக்க விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டபொழுது தங்கள் உள்நாட்டு விஷயங்களில் ஐக்கிய தேச சபை தலையிடக் கூடாதென்ற தென் ஆபிரிக்க அரசாங்கக் கொள்கையை ஐக்கிய தேச சபை ஏற்றுக்கொள்ளாததால தென் ஆபிரிக்க பிரதிநிதிகள் குறித்த சபையுடன் ஒத்துழையாவிரதம் பூண்டனர். 36 கூட்டங்கள் கழிந்தன. ஆனால் 37-ம கூட்டத்தில் பங்குபற்றினர்.

## சூரிய சத்தியால் சுவை அமுது சமைத்தல்

சூரிய சத்தியை உபயோகித்து உணவு சமைத்தல் கூடுமென்பதை இந்திய சாஸ்திர நிபுணர்கள் காட்டியிருக்கிறார்கள் என்றும் அவ்விதம சமையல் செய்யப்பெற்ற உணவைத் தாம் அண்மையில் அருந்தியிருப்பதாகவும் ஸ்ரீ நேரு ஒரு கூட்டத்திற் குறிப்பிட்ட பொழுது ஆக்கவேலையில் இந்தியர்கள் முயற்சி செய்யவேண்டுமென்றும் வீண் ஆரவாரப் பேச்சுகள் கூடாதென்றும் சொன்னார்.

## சைவப் பிரசங்கம்

சாவகச்சேரி கருங்காலி சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் மார்கழிமாதக் கார்த்திகைத் திருநாளாகிய (7-1-52) இரவு 7 மணியளவில சைவபிரசாரகர் வித்துவான் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் திருநாளைப் போவார் என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள. பிரசாரகர் அவர்கள் பக்தர்கள் பரமேசுவரனைப் பக்தி செய்ததினால் பரமன் திருவடியை அடைந்தனர் என்பதையும் ஆகவே நாங்களும் பரமேசுவரனைப்பக்திசெய்துசிரத்தையுடன் பரமேசுவரன் திருவடிகளை வழிபடுசல் அத்தியாவசியக மென்பதை வற்புறுத்தி வைத்தார்கள்.

## உயர்தர வங்கி உத்தியோக நியமனம்

இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் திரு பத்மநாதன இலங்கை மத்திய வங்கியில் மேற்பார்வை உயர்தர உத்தியோக நியமனம பெற்றிருக்கிறனர். இவர் இந்துக் கலலூரியிற் கற்றுத்தேறியபின் சர்வகலாசாலையிற்சேர்ந்து B.A (Hons.) பரீட்சையில் உயர்தர வகுப்பிற சித்தபெற்றவர். இப் பரீட்சையிற் பொருளாதார சாஸ்திர பாடத்தில் கண்ணியமான சித்திபெற்றதன் பயனாகச் சர்வகலாசாலையில் ஆசிரிய பதவி அளிக்கப்பெற்றனர்.

## 'சும்மா இரு' என்ற தூயஉபதேசம்பெற்றபெரியார்

1-ம் பக்கத்தொடர்ச்சி

மெய்தினராகலின், மௌன குரு சுவாமிகள் திருமறைக்காட்டை யடைந்து, அவருக்குத் துறவுநெறியருளிச் சிவபூசை யெழுந்தருளப் பண்ணி மெய்ஞ்ஞான நிட்டையாகிய சிவயோக நெறிகாட்டிச் சிவத்துடனிரண்டறக்கலந்து பரண்டுஞ் சிவத்தையே காணுஞ் சிவானந்தப் பெரு வாழ்வை யெய்துமாறு அருள்செய்தேகினர்.

### பெய்யெனப் பெய்தது மழை

அடிகள் அவ்வாறெழுகிப் பலதலங்களைத் தரிசித்துவரும் நாளில் இராமேச்சுரத்தில் மழையில்லாமல் மக்கள்வருந்துவதைக் கண்டு "சைவசமயஞ் சமயமெனி லச்சமயத் தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனி—லவ்வாரவென்று னர்தனின்பிலமுந்துவது முத்தியெனி—வானங்காண் பெய்ம்மின் மழை" என்று பாடி மழை பெய்வித்து மக்கள் வருத்தத்தை நீக்கியருளினர்.

அவர் அருளிய பாக்கள் சைவப் பொருள் வளம் நிறைந்து அருள் கனிந்தும்புந் தன்மையன. "கண்டனவெலாம் மோன வுருவெளியதாக" ப்பரசிவம் வணங்கிப் "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த" மெனக் கண்டு பாடுகின்றார். "சின்மயானந்த குருவே, மௌனகுருவே, யோகதந்த்ர குருவே" யென்று வணங்குகின்றார், "மன்னனைய பொய் யுடலை நிலையென்றும் மின்னார்

#### .... சைவசீலன் .... எழுதுவது

களின்மே மெய் யென்றும், பொன்னை யழியாத வளர்பொருளென்றும்" மயங்கும் லோகாயத மதம்சாராது வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி மன்னும் நெறிகாட்டுகின்றார். கொலை களவு கட் காமம பொய்ம்மொழி ஆயவை அருள் வழிக்கல்லாதனவென்று புகட்டுகின்றார். "..... சிறவீடுகட்டியதினடுசோற்றை யுண்டுண்டு தேக்கு சிறியர்கள் போல சட்டையை தாக்கற்ற கல்வியும விவேகமும் கன்னிலையமாக வுன்னி" என்று எம் கல்வி விவேகம் ஆகியவற்றின் சிறுமைகாண்பிக்கின்றார். "அவனன்றியோ ரணுவுமசையாது" என்றும் 'இகபா மிரண்டினிலுமுயிரினுக்குயிராகி யெங்குமநிறைகின்ற பொருள்" என்றும் எம்மனோருக்கு அசையாத உறுதி மொழியருளுகின்றார்.

இன்ன பிறவாக அருள் மேக மென்னப் பாமாரி பொழிந்து இராமநாதபுரத்தில இலட்சுமி நகரத்தில் பரமானந்த நிட்டையிலிருந்து சிவ பரம்பொருளுடன் இரண்டறக் கலந்தனர்.

"தாயுமானப் பெம்மான்
நன்னடியை யேத்துநர்க்குக்
காயும் வினையகலுங் காண்"

என்றபடி அருள் வாழ்க்கையின் அழகிய ஆத்மஞான உறுப்புக்களை எம் வாழ்க்கையி லமைத்து ஒளி பெற்றின்புறுவோமாக.

## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிராய மிருப்பதால் கிராமச் சங்கங்களிலும் பட்டினசங்கங்களிலும் நகரசங்கங்களிலும் நகரசபைகளிலும் தலைவரையும் உபதலைவரையும் திருவுளச்சீட்டுப் போட்டுத் தெரிந்துவிட்டால் இந்த இரகசிய ஒப்பந்தங்களும் கபடநாடக வஞ்சனைகளும் இல்லாதொழிவதுமல்லாமல் அந்தச்சங்க நிர்வாகமும் சீரான முறையிற் செவ்வனே நடைபெறுமல்லவா? அன்றியும் அரசியல் கூனிகளும சகுனிகளும் இல்லாதொழியவுங்கூடுமே!

## பிரதமர் வரவு

### பல திறப்பு விழாக்களும் அத்திவாரங்களும்

பிரதம மந்திரி திரு. D S. சேனநாயக 26-1-51 ல் சாவகச்சேரிக்கு வருகிறார்கள். அங்கே கிராம முன்னேற்ற ஒழுங்குக் காட்சியை டிறிபேக் கல்லூரியிற் பார்வையிட்டுக் கைதடியில் அரசாங்க வைத்தியசாலையைத் திறந்து வயோதிபர் நிலையத்துக்கு அத்திவாரக் கல்லிட்டு யாழ்ப்பாணத்தில மத்திய கிறிஸ்தவ வாலிபர் சங்க நிலையத்துக்கும் அத்திவாரக்கல்லிடுவார் பின்னர் சாவகச்சேரி அரசாங்க வைத்தியசாலையைப் பார்வையிடுவர். அதன்பின்னர் சாவகச்சேரியில் அமைக்கப் பெற்ற அரசாங்கப் பெண்கள் கல்லூரியைத் திறந்து வைப்பார்.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்கமாளிகை ... | ... ஆபரணங்கள்

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் ஐக்கியசாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் ஐராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna. at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna on Tuesday. January 22. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org